# கடையேழு வள்ளல்கள்

மனிதனாகப் பிறந்தவன் பிறருக்குக் கொடுத்து உதவும் பண்பு உள்ளவனாக இருக்க வேண்டும். உதவும் குணமும், கருணைப் பண்பும் உடையவர்களை மனிதர்களுள் சிறந்தவர்களாகக் கருதுவர். இத்தகைய மனிதர்களை வள்ளல்கள், கொடையாளிகள் என்று அழைப்பர். சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வள்ளல்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## பழங்காலத் தமிழ் வள்ளல்கள்:-

பழங்காலத் தமிழ் மன்னர்கள் தன்னை நாடி வரும் அனைவரையும் அன்புடன் வரவேற்பர். அவர்களின் துயரத்தினைப் போக்கி உணவளிப்பர். பின்னர் அவர்கள் விரும்பும் பொருளைக் கொடுத்து வழியனுப்புவர். இத்தகைய தயாள குணம் உடையவர்களை முதலேழு வள்ளல்கள், இடையேழு வள்ளல்கள், கடையேழு வள்ளல்கள் என வகைப்படுத்துவர்.

| | |
|---|---|
| **முதல் ஏழு வள்ளல்கள்**:- | 1. சகரன் 2. காரி 3. நளன் 4. தந்துமாரி 5. நிருதி 6. செம்பியன் 7. விராடன் |
| **இடையேழு வள்ளல்கள்**:- | 1. அக்குரன் 2. அந்திமான் 3. கர்ணன் 4. சந்திமான் 5. சிசுபாலன் 6. வக்கிரன் 7. சந்தன் |
| **கடையேழு வள்ளல்கள்** | 1. பேகன் 2. பாரி 3. காரி 4. அதியன் 5. ஆய் அண்டிரன் 6. நள்ளி 7. ஓரி |

இம்மூவரில் கடையேழு வள்ளல்கள் மிகவும் சிறப்பிற்குரியவர்கள். பாமர மக்களாலும் அறியப்பட்டு புகழ் பெற்றவர்கள்.

## மயிலுக்குப் போர்வை தந்த பேகன்:-

பேகன் பொதினி மலைக்குத் தலைவன். இம்மலை அதிக மழை வளம் உடையது. மழையின் வரவை முன்னிட்டு மயில் அகவியது. இதனைக் கண்ட பேகன், குளிரினால் அகவியது என்று எண்ணினான். உடனே தன்னுடைய போர்வையை (பொன்னாடையை) மயிலுக்கு வழங்கினான்.
இவ்வாறு பறவையிடமும் அன்பு காட்டியவன் பேகன்.

## முல்லைக்குத் தேர் தந்த பாரி:-

பறம்பு மலைக்குத் தலைவன் (மன்னன்) பாரி. ஒருநாள் பாரி தேரில் வந்து கொண்டிருந்தான். அப்பாதையில் முல்லைக்கொடிச் சுற்றி படர்வதற்குரிய கொம்பு இல்லாமல் தரையில் படர்ந்திருந்தது.

முல்லைக் கொடியின் மீது இரக்கம் கொண்டான் பாரி. முல்லைக் கொடியைத் தன் தேர் மீது வைத்து படரும்படி செய்தான்.

இவ்வாறு கொடிக்கும் தன் வள்ளல் குணத்தை வெளிப்படுத்தினான் பாரி.

## அதியன் தந்த அரிய நெல்லிக்கனி:-

ஒருநாள் அதியனுக்கு அரியவகை நெல்லிக்கனி ஒன்று கிடைத்தது. அக்கனியை உண்டால் நீண்ட நாள் வாழலாம். ஆனால் அதியன் அதை உண்ணவில்லை. தன்னை நாடி வந்த ஔவைப்புலவருக்கு அக்கனியை வழங்கினான். தன்னை விட தன்னை நாடி வந்தவர்கள் நீண்ட நாள் வாழ வேண்டும் என்ற பண்பு உள்ளவனாகத் திகழ்ந்தான் அதியன்.

இம்மூவரைப் போலவே திருமுடிக்காரி, ஆய்அண்டிரன், நள்ளி, ஓரி போன்றோரும் ஈகைத் தன்மை உடையவர்களாக இருந்தனர்.

ஊண் உணவு, வலிமை மிக்க குதிரை, வளமான நாடுகள் போன்றவற்றை வழங்கினர்.

இவர்களைப் போலவே நாமும் பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும்.